1995 நவம்பர் 8]

பண்ணும்போது, அதிகமான மருத்துவர்களை ரெக்ரூட் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்-கிளினிக்கல் சைடைப் பொறுத்தவரையில், மருத்துவர்கள் தனியாக இதுவரையில் எடுக்கப்படுவதில்லை. பொதுவாக எடுக்கப்படுகின்ற மருத்துவர்களில் யார் விருப்பம் தெரிவிக்கிறார்களோ அல்லது மாற்றத்தின் மூலமாகவோ, நான்-கிளினிக்கல் சைடிலே நாம் அவர்களை அமர்த்திக் கொண்டிருந்தோம். இதிலே தனியாக பட்டம் பெற்றவர்களையும் இதுவரை தேர்ந்தெடுக்காமல், அங்கே வந்த பின்னாலே, அதற்கான பட்டம் பெற்றவர்களைத் தேடிப்பிடித்து போட வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் அரசாங்கம் சமீபத்திலே நான்-கிளினிக்கல் சைடிலே இருக்கிற பிரச்சினைகளைக் கருத்திலே கொண்டு, தனியாக நேரடியாக அந்த டிபார்ட்மென்டுகளுக்காக மருத்துவர்களை நியமிப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறது. அதோடு பட்ட மேற்படிப்பிற்காக ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்குப் பணியிலே இருக்கக்கூடியவர்கள் பட்ட மேற்படிப்பிற்காக மனு செய்தால், 15 பேர்கள் நான்-கிளினிக்கல் சைடிலிருந்து ஃபுல் சேலரியோடு பட்ட மேற்படிப்பிற்காக அனுமதிக்கப்படுகிறார்கள். அதனால், இருக்கின்ற பிரச்சினைகள் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இப்போது நான்-கிளினிக்கல் சைடிலே அனேகமாக மருத்துவர்கள் இல்லை என்ற நிலையை முழுமையாக இந்தத் திட்டத்தின் மூலமாக நம்மால் போக்கிவிட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45, திருமதி பி. நிர்மலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

45—

மாவட்டத் தலைநகரங்களில் நான்கு வழிப்பாதைகள் அறிமுகம் செய்தல்

35614*—திருமதி பி. நிர்மலா:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகரங்களில் நான்கு வழிப்பாதைகளை அறிமுகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட தலைநகரங்களில் நான்கு வழிப்பாதை அமல்படுத்தத் தேவையான அகலமான சாலைகள் இல்லையாதலால், அந்நகரங்களில் நான்கு வழிப்பாதை அமல் செய்ய வாய்ப்பு இல்லை.

திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலுமே குறுகலான சாலைகள் இருப்பதில்லை. திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர் போன்ற சில இடங்களில் அகலமான சாலைகள் இருக்கின்றன. தவிரவும், சாலையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டால் இதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இதைத் தவிர, பெருகி வரும் மக்கள் தொகை, வாகனங்களின் பெருக்கம் ஆகியவற்றின் காரணமாக, இதனை மறுபரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். இதன் மூலம் சென்னையைப் போல நல்லவிதமான தலைநகரங்களைக் கொண்டு வரலாம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு வழிச் சாலை என்பது-அகலமான சாலைகள் இருக்கின்ற இடங்களிலே எல்லாம், நான்கு வழிச் சாலைகளை அமைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறோம். இருந்தாலும்கூட, தலைநகரங்கள் அனைத்திலும் நான்கு வழிச் சாலைகளாக மாற்றியமைக்கவேண்டும் என்று ஒரு குறிப்பினை அதிலே அவர் கொடுத்திருந்தார். இதிலே 4, 5 இடங்களை, அதாவது மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற பல்வேறு நகரங்களை ஒப்பிட்டுக் காட்டினார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலேதான் 4 வழிச் சாலைகளை அமைக்க முடியுமே தவிர, பல்வேறு இடங்களிலே குறுகிய சாலைகள் இருக்கின்ற காரணத்தாலே, 4 வழிச் சாலைகளை அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதிகளிலே 4 வழிச் சாலைகள் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று சொன்னால், அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

1995 நவம்பர் 8]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே 4 வழிப் பாதைகளை அமைக்க முடியுமா என்று ஒரு கேள்விக் கணை தொடுக்கப்பட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் எங்கெங்கெல்லாம் அகலப்பாதைகள் இருக்கின்றன என்கிற கணக்கையும் இங்கே எடுத்து வந்திருக்கவேண்டும். எங்களுடைய வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தினுடைய தலைநகராக உள்ள வேலூரில் 4 வழிப் பாதைகளை அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கின்ற கேள்வி வேலூரைப் பற்றியது அல்ல. 4 வழிச் சாலை என்று குறிப்பிட்டு, அதிலே சொல்லியிருக்கிறார். அதிலேதான் கேட்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு வழிச்சாலைக்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்றுதான் அவர் கேட்டிருக்கிறார். எங்கெங்கே என்று கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது குறிப்பிட்டிருக்கிறார்கள் இதிலே. மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்றவை பல்வேறு கேள்விகளிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால், அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. நான்கு வழிச் சாலை குறிப்பிட்ட இடங்களில், மாநகரமாக இருக்கின்ற இடங்களிலே, மாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அவருடைய கேள்வித்தாளிலே இருகிறது. அதற்கான பதிலும் என்னிடத்திலே இருக்கிறது. ஆகவேதான், நான்கு வழிச் சாலைகள் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் அங்கே இருக்கின்ற பல்வேறு என்குரோச்மென்ட்களை அப்புறப்படுத்துவதற்கு முன்வருவார்களே யானால் நான்கு வழிச் சாலை அமைக்கலாம். நீங்கள் அப்போது போராட்டத்தை அங்கே நடத்துவீர்கள். அங்கேயும் அதைச் செய்வீர்கள், இங்கேயும் வந்து நான்கு வழிச் சாலை வேண்டும் என்று கேட்பீர்கள். அதுதான் எங்களுக்குச் சிக்கலாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போராட்டம் நடத்தினால் பரவாயில்லை. அவரே ஆக்கிரமிக்காமல் இருந்தால் நல்லது. (சிரிப்பு). திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நீலாம்பூரிலிருந்து மரப்பாலம் வரை புதியதாக ஒரு புறநகர் வழிச் சாலை அமைப்பதற்கு அரசு உத்தேசித்திருந்து, இந்த ஆண்டு பணி துவங்க உள்ளது. அந்தச் சாலையையாவது நான்கு வழிச் சாலையாக அமைத்துக் கொடுக்க முன்வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலே கேட்க வேண்டிய கேள்வி இது. பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். உங்களுடைய உணர்வுகளை அவர் பரிசீலிப்பதாக அவர் முகத்திலிருந்தே தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 46, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

46—

CONVERSION OF OPEN FIELDS INTO PARKS

***36756–Dr. Beatrix D' Souza:**

Will the Hon. the Minister for Transport and Forests be pleased to State-

Whether the Government will consider converting the open fields in the Government Estate into parks?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் திறந்த வெளி நிலங்களைப் பூங்காவாக மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS